<u>**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**</u>

O.S.No. 133/2020 connected with O.S.No.56/2020 தேதி- 31.07.2026
(PW.1) – மணிகண்டன்

**<u>1 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-</u>**

1.அசல் வழக்கு எண்.56/2020 ன் சுவாதீனத்தை திருப்பி தரக் கோரி எதன் அடிப்படையில் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் ஆவணங்களின் அடிப்படையிலும், ரீ சர்வே பிளானின் அடிப்படையிலும் கோரியுள்ளேன். வா.சா.ஆ.1 விலை ஆவணத்தில் சொத்து விவரத்தில் கட்டிடங்கள் இருப்பதாகவோ, BSNL Tower இருப்பதாகவோ பிராதில் சொல்லியுள்ளவாறு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு விலைக்கு கொடுத்த நபருக்கு கொடுத்தஆவணத்திலும் மேற்சொன்ன குறிப்புகள் இல்லை என்றால் அதை பற்றி தெரியாது.

2. ரீ சர்வேபடி அளவுகள் இருந்தாலும், தனிப்பட்ட முறையில் சர்வேயர் மூலமாக சொத்தை அளந்தேனா என்றால் ஜான் என்ற சர்வேயர் உதவியுடன் அளந்து பார்த்தேன். கிரைய வாங்குவதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு அளந்து பார்த்தேன் என்றால் இரண்டு நாட்களுக்கு முன்பு அளந்து பார்த்தேன். தற்போது உள்ள அளவுகளின் படி இருந்ததா, பழைய அளவுகளின் படி இருந்ததா என்றால் தற்போது உள்ள அளவுகளின் படி இல்லை, ஒரு செட் அமைக்கப்பட்டு இருந்தது, ஒரு கட்டிடம் இருந்தது, ஒரு கோழிக்கடை நடத்தி வந்தார்கள். அதேனாடு சேர்ந்து ஒரு BSNL Tower அமைக்கப்பட்டுள்ளது. அந்த BSNL Tower ன் பாதி அளவு என்னுடைய சொத்திற்குள் அமைந்திருந்தது.

3. BSNL Tower மத்திய அரசாங்கத்தின் நிறுவனம் என்றால் சரிதான். BSNL Tower அமைக்க சொத்தின் உரிமையாளரிடம் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தி தான் அமைக்க முடியும் என்றால் சரிதான். அவ்வாறு BSNL Tower அமைத்தற்கான ஏதாவது ஒப்பந்தம் எனக்கு விலைக்கு தந்த நபரிடம் ஏற்பட்டு இருந்ததா என்றால் இல்லை, ஆன்டனி என்பவர் தான் சொத்துக்களை பராமரித்து வந்தார், அவர் பெயரில் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

4. நான் சொன்னது போல எனக்கும், என்னுடைய கிரயதாருக்கும் இரண்டு வருடங்களுக்கு பிறகு BSNL Tower ல் உள்ளதால் அதில் வழங்கப்படும் வாடகை தொகையில் பங்கு கொடுக்கப்பட வேண்டும் ஆவணம் எதுவும் ஏற்படுத்தப்பட்டதா என்றால் இல்லை, வாக்கால் ஏற்படுத்தப்பட்டது. BSNL Tower அமைக்கப்பட்டது குறித்து கிரயம் ஏற்படுத்துவதற்கு முன்பு ஆவணங்கள் ஏதேனும் சரி பார்த்தேனா என்றால் இல்லை.

5. BSNL அலுவலகத்திற்கு BSNL Tower க்கு வழங்கப்படும் வாடகையில் பாதி தொகை எனக்கு தர வேண்டும் என்று கடிதமோ, அறிவிப்போ அனுப்பினேனா என்றால் இல்லை, ஆன்டனி எனக்கு பணம் தருவதாக ஒப்புக் கொண்டார். நான் சொத்தை மேற்சொன்ன ஆன்டனி என்ற நபரிடமிருந்து விலைக்கு வாங்கவில்லை என்றால் சரிதான். நான் ஆன்டனி என்பவரிடமிருந்து எந்த சொத்தையும் விலைக்கு வாங்காததால் எனக்கும், ஆன்டனிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல, ஆன்டனி தான் சொத்தை விலைக்கு வாங்கிக் கொடுத்தார், ஆன்டனி வீட்டில் வைத்து தான் கிரய தொகையை செலுத்தினேன்.

6. நான் தாக்கல் செய்த பிராதிலோ, முதல் விசாரணையிலோ மேற்சொன்ன சங்கதிகளை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தற்சமயம் சாட்சியம் அளிக்கும் விவரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றாலும், வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டு நீதிமன்ற ஆணையர்கள் என்னுடைய சொத்தையும், பிரதிவாதிகளின் சொத்தையும் பார்வையிட்டார்கள் என்றால் சரிதான்.

7. வாதி மற்றும் பிரதிவாதிகளின் சொத்து அருமனை ரோட்டில் வடக்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரிதான். ரோட்டின் சிறுபகுதியை ஆக்கிரமித்து காம்பவுண்ட் சுவர் அமைத்துள்ளேன் என்று நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் வாங்கிய சொத்தானது ஜோனி ஜோசப் 1 சென்ட் சொத்தை வேறு நபர்களுக்கு கொடுக்கப்பட்டு, நடுப்பகுதி எனக்கு கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

8. வழக்கு பட்டிகை சொத்தின் கிழக்கு பகுதி பிரதிவாதிகளின் கைவசத்தில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் சொத்தின் கிழக்கு பகுதியில் இருக்கக்கூடிய சொத்தினுடைய எல்லா பகுதியிலும் இடைவெளியில்லாமல் கட்டிடம் கட்டப்பட்டு உள்ளது என்றால் சரிதான்.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.